museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 டிசம்பர்

**நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் ’சந்திப்புகள்’ கண்காட்சியின் சுழற்சி 3 தொடங்குகின்றது.**

நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) கண்காட்சியின் சுழற்சி 3 டிசம்பர் 8ம் திகதி 2022 காட்சிப்படுத்துகின்றது. பொதுமக்கள் இக் கண்காட்சியை மார்ச் 19ம் திகதி 2023 வரை கிரேஸ்கட் பூல்வார்ட், கொழும்பில் அமைந்திருக்கும் அருங்காட்சியக வளாகத்தில் காணலாம். MMCA இலங்கையின் தலைமை எடுத்தாளுனர், ஷர்மினி பெரெய்ரா மற்றும் எடுத்தாளுனர் சந்தேவ் ஹண்டியால் எடுத்தாளுமை செய்யப்பட, ’சந்திப்புகள்’ கண்காட்சி, பெப்ரவரி 11, 2022 தொடங்கப்பட்டு மார்ச் 19, 2022 நிறைவுபெறும். கண்காட்சிக்கான உள்நுழைவு இலவசம்.

’சந்திப்புகள்’ கண்காட்சியின் சுழற்சில் மூன்றில், ஏ.மார்க் (1933–2000), ஜார்ஜ் கீற் (1901–1993), ஹரஸ்கம (b. 1959), மற்றும் ஜனனி குரே (b. 1974) ஆகியோரின் படைப்புகளை உள்ளடக்கிய இரண்டு புதிய கண்காட்சி கூடங்களை உள்ளடக்கியுள்ளது. இவை ஆடைகளை, குறிப்பாக அவை எவ்வாறு செயல்பாட்டைத்தவிர, வர்க்கம், தொழில், பால்நிலை மற்றும் தேசிய அடையாளத்தைப் பற்றிய தகவல்களைக் குறிக்கின்றது என்பதை காட்சிப்படுத்துகின்றன. இக் காட்சியில் ஜார்ஜ் கீற்றின் ‘Kandyan Bride’ (1951) ஓவியமும் ஜனனி குரேயின் ‘Osariya’ (2015) எனும் ஆற்றுக்கலையில் அவர் அணிந்திருந்த கம்பியால் உருவாக்கப்பட்ட ஆடையையும் ஒப்பீடு செய்கையில் வெளிப்படும் முரணை காணலாம். இவ்விரு படைப்புகளும்

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

ஆடைகளுக்கு சமூக அடையாளத்துக்கு இடையேயான தொடர்பை வெளிக்கொணர்வதுடன், பார்வையாளர்களுக்கு கண்டியில் கட்டப்படும் சேலை முறை அல்லது 'ஒசரியவை' இலங்கையில் வெவ்வேறு விதமாக நோக்கும் விதங்களை ஆராய வழிவகுக்கின்றது.

"இக் காட்சியில் ஜார்ஜ் கீற்றின் ஒவியங்களிலுள்ள அரசியல் தொனியை முக்கியமாக அவர் பெண்களை காட்சிப்படுத்திய விதத்தை நாம் மீள் பரிசீலிக்க உதவும் என நம்புகிறேன். அண்மையில் அரசாங்க பெண் உத்தியோகத்தர்களின் ஆடைகளைப் பற்றிய பொதுமக்களின் எதிர்ப்பை , கீற்றின் ஒவியத்தை மறு பரிசீலனை செய்வதூடாகவும், தேசிய அடையாளத்திற்கு ஆடைகளின் பங்கினை கேள்வியெழுப்பவும் உதவும்," என ஹண்டி குறிப்பிடுகின்றார்.

டிசம்பர் 8 திறக்கப்படவுள்ள இரண்டாவது புதிய காட்சியும் ஜார்ஜ் கீற்றின் ஒவியத்தின் தாக்கத்தால் அமைக்கப்பட்டதாகும். ஆனால் இது ஆன்மிகம் சார்ந்த தலைப்பை கொண்டமைந்துள்ளது. இதில், ஜார்ஜ் கீற்றின் 1949ம் ஆண்டு தீட்டப்பட்ட 'The Offering' எனும் ஒவியமானது மேலும் மூன்று ஒவியங்களுடன் சிலுவையில் அறையும் காட்சியை சித்தரிக்கின்றது. இக் காட்சியில் சிலுவையில் அறையும் காட்சியை சித்தரிக்கும் நெலுன் ஹரஸ்கம மற்றும் ஏ. மார்க்கின் படைப்புகளும், ஜார்ஜ் கீற்றின் படைப்பும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

MMCA இலங்கையின் தலைமை எடுத்தாளுனர் பெரெய்ரா கூறியதாவது, "சிலுவையில் அறையப்படுவதை சித்தரிக்கும் ஒவியங்களில் ஜார்ஜ் கீற்றின் 'The Offering'உடன் இரு சமகால கலைஞர்களின் படைப்புக்களை ஒன்றாக காட்சிப்படுத்தும் பொழுது ஏற்படும் எண்ணங்களை உருவாக்குவதே 'சந்திப்புகள்' கண்காட்சியின் நோக்கமாகும். இலங்கையில் முதன்முறையாக ஜார்ஜ் கீற்றின் தனி ஒவியங்களை காட்சிப்படுத்தும் 'சந்திப்புகள்' கண்காட்சியினூடக, கீற்றின் ஒவியங்களை பார்வையிடாமல் கூறப்படும்காலம் கடந்த கலை வரலாறு அல்லது

’கலைத்திறனாய்வுடைமையை’ பற்றிய எண்ணங்களை தகர்க்கும் பணியை தொடங்குகின்றது. எமது அணுகுமுறையினூடாக கீற் மற்றும் அவர் காலத்து சமகால கலைஞர்களின் படைப்புகளை நுணுக்கமாக பார்வையிடுவதை ஊக்குவிக்க முயல்கிறோம்.”

‘சந்திப்புகள்’ கண்காட்சியின் மூன்றாம் சுழற்சியில் புதிய இலவச பொது நிகழ்ச்சிகள் பொதுமக்களுக்கும் கலைப்படைப்புகளுக்கமான ஊடாட்டத்தை அதிகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் ஒவியர்களுடன் கேலரி உரையாடல், தொழில்வல்லுனர்களுடன் பயிற்சிபட்டறைகள் மற்றும் அருங்காட்சியக எடுத்தாளுனர்கள் மற்றும் வருகைக்கல்வியாளர்களுடன் கண்காட்சி சுற்றுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

‘சந்திப்புகள்’ கண்காட்சியானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கடர் கல்வி நிறுவனத்தின் அளப்பரிய ஆதரவாலும், ப்ஹயார் ப்ஹர்ஸ்ட் காப்புறுதி மற்றும் நிலு கட்டிடம் மற்றும் பொறியியல் நிறுவனத்தின் ஆதரவையும் பெற்றுள்ளது. வானொலி ஒருங்கினைப்பாளர்களாக Lite 87, Rhythm World, மற்றும் TNL Now இயங்குகின்றன.

நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு www.mmca-srilanka.org நாடுங்கள் அல்லது முகப்புத்தகத்தில் facebook.com/mmcasrilanka அல்லது இன்ஸ்டாக்ராமில் instagram.com/mmcasrilanka/ தொடருங்கள்.